www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு எண் | | | | | | |

# மாதிரி காலாண்டுத் தேர்வு–2022–23

வகுப்பு 12 **பொருளியல்** காலம்:2.30

மதிப்பெண்கள்:90

## Part – I

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** **20 x 1 = 20**

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை
அ. சொத்து மற்றும் நலமும் ஆ. உற்பத்தி மற்றும் நுகர்வு இ. தேவையும் மற்றும் அளிப்பும்
ஈ). நுண்ணியல் மற்றும் பேரியல்

2. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது ?
அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. சமத்துவ அமைப்பு இ. உலகமய அமைப்பு
ஈ. கலப்புப் பொருளாதார அமைப்பு

3. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது ?
அ. வருவாய் ஆ. வரி இ. செலவு ஈ. வருமானம்

4. __________ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலை வீத வருமானம் கண்டறியலாம்.
அ. உற்பத்தி ஆ. நாட்டின் மக்கள் தொகை இ. செலவு ஈ. GNP

5. PQLஐ என்பது ............ன் குறியீடு ஆகும்.
அ. பொருளாதார வளர்ச்சி ஆ. பொருளாதார நலன்
இ. பொருளாதார முன்னேற்றம் ஈ. பொருளாதார மேம்பாடு

6. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது ..............
அ. விளைவு அளிப்பு பற்றாக் குறை ஆ. விளைவு தேவை பற்றாக்குறை
இ. இரண்டும் பற்றாக் குறை ஈ. எவையும் இல்லை

7. தொன்மைக் கோட்பாட்டின் படி, வட்டி வீதம் ............... க்கான வெகுமதி
அ. முதலீடு ஆ. தேவை இ. மூலதனம் ஈ. சேமிப்பு

8. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு ? அ. 0.8 ஆ. 800 இ. 810 ஈ. 0 .81

9. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு
அ. நுகர்வுச் சார்பு ஆ. சேமிப்பு சார்பு இ. முதலீட்டுச் சார்பு ஈ. மொத்த தேவைச் சார்பு

10. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை
அ. குறைக்கிறது ஆ. உயர்த்துகிறது இ. மாற்றாது ஈ. மாற்றும்

11. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்.
அ. J. R. ஹிக்ஸ் ஆ. R.G.D.ஆலன் இ. கான் ஈ. கீன்ஸ்

12 ஆர்பிஐ –ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ. டில்லி ஆ. சென்னை இ. மும்பை ஈ. பெங்களூரு

13. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
அ. 1908 ஆ.1910 இ. 1911 ஈ. 1914

14. கூலி மற்றும் மூலப் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம் அதிகரிப்பது ..................... பணவீக்கம் ஆகும்
அ. செலவு உந்து ஆ. தேவை இழுப்பு இ. ஓடும் ஈ. தாவும்

15. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்
அ. உயர்ந்த பட்சமாக ஆ. மிக மோசமாக இ. மிக குறைந்த பட்சமாக ஈ. மிக நல்ல நிலையில்

16. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது
அ. தாவும் பணவீக்கம் ஆ. மிதமான பணவீக்கம் இ. உயர் பணவீக்கம் ஈ. பணவாட்டம்

17. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது ?
அ. கடன் பணம் ஆ. முன்பணம் இ. கடன் பணம் மற்றும் முன்பணம் ஈ. கடன் பெறுதல்

18 . ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
அ. வணிக வங்கிகள் ரிசர்வ்வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
ஆ. ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ. அந்நிய செலாவணி விகிதம் ஈ. நாட்டின் வளர்ச்சி விகிதம்

19. ஏற்றுமதி இறக்குமதி வங்கி துவங்கப்பட்ட து ?
அ. ஜுன் 1982 ஆ. ஏப்ரல் 1982 இ. மே 1982 ஈ. மார்ச் 1982

20. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ. வாஷிடங்டன் டி.சி ஆ. நியூயார்க் இ. வியன்னா ஈ. ஜெனிவா

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வின ா எண் 30-க்கு கட்டாயம் விடையளி** 7X2=14.

21. பண வீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.
22. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது ?
23. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக
24. நுகர்வுச் சார்பு என்றால் என்ன ?
25. பெருக்கி – வரையறு
26. பண்டப்பணம் என்றால் என்ன ?
27 தேக்கவீக்கம் என்றால் என்ன ?
28. வணிக வங்கிகள் என்பதனை வரையறு.
29. பொது சந்தை வரையறு.
30. வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக
33. J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக
34. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
35. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?
36 வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.
37. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
38. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக
39. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக
40. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (அல்லது)
முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.

42. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி. (அல்லது)
தேசிய வருவாய் கணக்கிட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?

43. வேலையின்மைகளின் வகைகளை விவரி (அல்லது)
தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

44. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி. (அல்லது)
பணத்தின் பணிகளை விளக்குக.

45. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக. (அல்லது)
இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

46. அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமின்மையின் வகைகளை விவரி. (அல்லது)
பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.

47. உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க. (அல்லது)
இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ – ன் பங்கினை விவாதிக்க.

A.Alexis.P.G Teacher (Economics) Don Bosco Hr.Sec.School.Varadarajanpet. Ariyalur.Dt.Cell: 9543776128

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593